விலை: 50.00
பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 071 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 16 செவ்வாய்க்கிழமை (28.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## பொதுமக்கள் வாயை மூடிக்கொண்டு உட்கார வேண்டும் என்றே அரசு விரும்புகிறது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

அனைவரும் வாயை மூடிக் கொண்டு உட்கார வேண்டும் என்பதே அரசாங்கம் பொதுமக்களுக்கு சொல்லும் செய்தி என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி நேற்று முன்தினம் நடத்திய போராட்டத்தின் மீது பொலிஸார் மேற்கொண்ட அடக்கு முறை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் கடந்தவாரம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கூட, ஜனாதிபதி ரணில் விக்கிரம 11

## கரவெட்டியில் புடைவை கடையில் தீ விபத்து

(கரணவாய்)

கரவெட்டி, நாவலர்மடம் சந்தியில் உள்ள புடைவையகத்தில் ஏற்பட்ட தீ பொதுமக்கள், பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் தீயணைப்பு படையினரின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததனால் பல்லாயிரக்கணக்கான பெறுமதியான புடைவைகள் பாதுகாக்கப் பட்டுள்ளன.

நேற்று திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் புடைவையகத்தின் பின்பக்கத் 11

# அரசுக்கு எதிராக தொடர் போராட்டம்

## ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தத்துக்கு தயாராகும் தொழிற்சங்கங்கள்

*(கொழும்பு)*

அரசாங்கத்துக்கு எதிராக தொடர் போராட்டங்களை மேற்கொள்ள பல்வேறு தரப்பினர் தயாராகி வருகின்றனர்.

அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிச் சட்டத்துக்கு எதிராக இவ்வாறு தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்க தொழிற் சங்கங்களின் கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது. *(11ஆம் பக்கம் பார்க்க)*



## மீண்டும் மின்வெட்டு அமுல்படுத்தப்படலாம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்கள் மீண்டும் அதிகரிக் கப்பட்டுள்ள போதிலும் மீண்டும் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என இலங்கை மின்சார சபையின், மின் பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரத்ன தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் இரண்டு மணித்தியால மின்வெட்டு நாட்டில் தொடர்ந்திருந் 11

### புத்தூர் கிழக்கில்

## மூளைக் காய்ச்சலால் 4 வயது சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த 4 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள் 11



## தோட்டக் கிணற்றுக்குள் வீழ்ந்த வயோதிபர் உயிரிழப்பு

### கரவெட்டியில் சம்பவம்

(கரணவாய்)

கரவெட்டி, கப்பூது பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற தோட்டக் கிணற்றில் தவறிவீழ்ந்து வயோதிபர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்னையா பிள்ளை (வயது-65) என்பவராவார். 11

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குக

### மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி நேற்று முன்தினம் நடத்திய ஆர்ப் பாட்டத்தை தடுக்க பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் அறிக்கை சமர்ப் பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்குமனித உரிமைகள் ஆணைக்குழு 11

## பொருளாதாரத்தை மீட்கவே கடுமையான தீர்மானம் எடுக்கப்பட்டது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக பிரபலமற்ற கடுமையான தீர் மானங்களை எடுக்க நேரிட்டது.

இதனால் சகலரும் பாதிக் கப்பட்டுள்ளனர் என்பதை நான் அறிவேன். 11

### அரசுக்கு எதிரான போராட்டம்

## ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்த ஜே.வி.பி வேட்பாளர் மரணம்

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி நடத்திய போராட்டத்தில் பொலிஸாரின் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 61 வயதுடைய நிமல் அமலசிறி என்ற வேட்பாளர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனாவில் வாள்வெட்டு சந்தேகநபர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைய முறப்பட்டு கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளதுடன், பொருட்களை வாளால் வெட்டி சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நோயாளர் பார்வை நேரம் முடிந்த பின் தந்தையை பார்வையிட அனுமதிக்கவில்லை என்ற காரணத்துக்காகவே இந்த வன்முறை இடம்பெற்றதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

துரித விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் ஒருவரை நேற்றுகைது செய்தனர்.

ஏழாலையைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார். ஏனையோரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினார். (ம-7,33)

# சில சேவைகளை அத்தியாவசியமாக பிரகடனப்படுத்தி வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

துறைமுகம், விமான நிலையம், போக்குவரத்து சேவை மற்றும் அதனுடன் இணைந்த சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், துறைமுகத்தினுள் இருக்கும் காலத்திலிருந்து உணவுப் பொருள், பானம், நிலக்கரி, எண்ணெய், எரிபொருள் என்பவற்றை வெளியேற்றுதல், கொண்டு செல்லல், தரையிறக்குதல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல், அகற்றுதல் ஆகியவற்றுக்காக தெருக்கள், பாலங்கள், மதகுகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், ரயில் பாதைகள் உள்ளிட்ட வீதியூடான, ரயில் மூலமான அல்லது வான்மூலமான போக்குவரத்துச்சேவைகளுக்கான வசதிகளை வழங்குதலும் பேணுதலும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)


A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!
உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling
அழகுக் கலை, Facials, மணப்பெண் அலங்காரம்,
பலவிதமான சேலை அணியும் முறைகள், ஆரி எம்ரோய்டரி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 04.03.2023 சனி காலை 10.30
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08.03.2023 புதன் காலை 10.30
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். (C-6073)
யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)


# சங்கானையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்குள் உள்ள சங்கானை சந்தைக்குள் உள்ள கடையினை உடைத்து 80 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடையின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் தமது கைவரிசையை காட்டிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)


யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
வருடாந்த
இல்ல மெய்வல்லுநர் போட்டி
2023
இடம் : பாடசாலை மைதானம்
காலம் : 01.03.2023
நேரம் : பி.ப 01.00 மணி
தலைவர்
திரு. தி. வரதன்
(கல்லூரி முதல்வர்)
பிரதம விருந்தினர்
திரு. வை. கிரிதரன்
(பொது முகாமையாளர் - கோஸ்வே பெயின்ற் லங்கா பிறைவேற் லிமிட்டற்.
தலைவர் - கொழும்பு பழைய மாணவர் சங்கம்)
சிறப்பு விருந்தினர்
திரு. கப்டன். ந. கஜேந்திரன்
(ஆசிரிய ஆலோசகர் - உடற்கல்வி வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்)
கௌரவ விருந்தினர்
திரு. பி. ரஜாகரன்
(பொருளாளர் - பழையமாணவர் சங்கம், பிரான்ஸ்)
(C-6074)





கண்ணீர் அஞ்சலி
எமது சக நண்பன்
திரு. பத்மநாதன் சதீஸ் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி பத்மநாதன் வனஜா
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.





ஆழ்ந்த துயரத்துடன்
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்.
(14751)



மணிவிழா
வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்
திரு. நல்லையா கணேசராசா
(பாடசாலைப் பணியாளர் தரம்-I)
சேவைக்காலம்
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்
05.08.1998 - 05.05.2015
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி
06.05.2015 - 27.02.2023
எமது பாடசாலையில் சேவையாற்றி
28.02.2023 செவ்வாய்க்கிழமை
இன்று ஓய்வு பெறும்
திரு. நல்லையா கணேசராசா
அவர்களைப் பாராட்டி வழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரிக் கழகம் -
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி





2ஆம் ஆண்டு
நினைவலைகள்
தோற்றம்
02 • 11 • 1935





மறைவு
20 • 02 • 2021
கடந்த 20.02.2021 அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்
அமரர்
பரமாந்தர் கந்தையா ஆறுமுகம்
ஈராண்டாகியதோ எம் ஒளிவிளக்கே
உமை இழந்து இன்று
ஈரவிழி காயவில்லை
பார்போற்ற வாழ்ந்தீர்!
சீரோடு எம்மை உயர வைத்தீர்!
பேரப்பிள்ளைகளும் கண்டு சென்றீர்!
வேராக இருந்து எம்மை
விருட்சங்களாக்கிய உங்கள்
நேரான பண்புகளை நெஞ்சில் சுமந்தபடி
நீர்காட்டிய வழியில் நடக்கின்றோம்.
தீராது என்றும் உம் நினைவுகள்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
தெணியம்மன் வீதி, திருநாவலூர்,
புலோலி மேற்கு, பருத்தித்துறை. (C-6072) - குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் மறுசீரமைப்பு தொடர்பில்

# சாதகமான தீர்மானத்தை அறிவிக்க

# சீனா இணக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏற்றுக் கொள்ளக்கூடிய சாதகமான ஒரு தீர்மானத்தை மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குள் அறிவிப்பதாக சீனா தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்து உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள அரசாங்கம் மேற் கொண்டுள்ள பேச்சுவார்த்தை தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சீனா இரண்டு வருட கால அவகாசம் வழங்க எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்தும் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகவும்கடன் நிலைபேறான தன்மையை அடைந்ததும் அதனை தொடர்ந்து சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணலாம் என்றும் செஹான் சேமசிங்க தெரிவித்தார். (நி)

# குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் சொத்துகளை ஒப்படைக்க தயார்

## நாமல் ராஜபக்ஷ



(கொழும்பு)

தானும் தனது குடும்பத்தாரும் சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்துகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைக்க தயாராக உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அவர், தானும் தனது குடும்ப உறுப்பினர்களும் குற்றவாளிகள் அல்ல என்பதை நிரூபிக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் பல சொத்துகள் மற்றும் பல சர்வதேச வங்கிக் கணக்குகள் இருப்பதாகவும் உகண்டாவுக்கு பணம் அனுப்பியதாகவும் தம் மீது முன்வைக்கப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களும் பொய்யானவை.

மேலும் இவ்வாறு தம் மீதும் தமது குடும்பத்தினர் மீதும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற கூறப்படுகின்ற பொய் என்றும் உண்மையில் அவ்வாறான சொத்துகள் இருந்தால் அவற்றை அரசாங்கத்திடமும் நாட்டிடமும் ஒப்படைக்கத் தயார் என்றும் தெரிவித்தார். (நி)

# '69 லட்சம் மக்கள் ஆதரவு' என்ற கதை இனி எடுபடாது

## -சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு-



(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பத்தின் மீதான மக்களின் நம்பிக்கை பல மடங்கு குறைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், இனிமேல் 69 இலட்சம் என்ற கதை இந்நாட்டில் செல்லாது என்றும் தமது வாழ்க்கையை அழித்தமைக்கு ராஜபக்ஷக்களே காரணம் என்பதை 92 வீதமான மக்கள், ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (நி)

# ஐ.எம்.எப் இன் கடனுதவியின் பின் மக்களுக்கு நிவாரணம் வழங்கலாம்

## அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையை பாதித்துள்ள பாரிய காயத்தை சுகப்படுத்துவதற்காக ஜனாதிபதி கடுமையான தீர்மானங்களை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டாலும், எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் மாதங்களில் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

மொனராகலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற வேட்பாளருடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மொனராகலை பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்தி, குறைத்துக்கொண்டு செல்கிறோம். எதிர்வரும் காலங்களில் மின்சார கட்டணங்களையும் குறைப்பதற்கு முடியும்.

மேலும், நாடு அராஜகமடைந்த நேரத்தில் நாட்டை பொறுப்பேற்று நடத்த எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. என்றாலும், எவரும் அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வராமல் புறக்கணித்தனர்.

இறுதியில், நாட்டை பொறுப்பேற்குமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது, எந்த நிபந்தனையும் இல்லாமல் பொறுப்பேற்றார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது எதிர்கால அரசியல் தொடர்பில் சிந்திக்காமல், மக்கள் தொடர்பாக சிந்தித்து அவரின் தூர நோக்கு சிந்தனையின் பிரகாரம், இந்த நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்ல முன்வந்தார். ஆனால், எதிர்க்கட்சியினர் அரசாங்கத்துடன் டீல் போடுவதாக குற்றம் சாட்டினர்.

ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்கும் போது எல்லா இடங்களிலும் இருந்த வரிசைகளை இல்லாமலாக்கினார்.

இருந்தபோதும், மக்களின் பிரச்சினைகள் முழுமையாக தீரவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி அடுத்த மாதமளவில் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

இந்த நிதியுதவி கிடைத்தால், அடுத்துவரும் 6 ஆம் 7 ஆம் மாதங்களுக்குள் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, மக்கள் நிம்மதியாக வாழ முடியுமான சூழலை ஏற்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

# சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான புதிய உறுப்பினர்கள் நியமனம்

(கொழும்பு)

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான புதிய உறுப்பினர்கள் நியமனம் இந்த வாரம் இடம்பெறவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான புதிய உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான விண்ணப்பங்கள் கோரும் பணி தற்போது நிறைவடைந்துள்ளதாகவும் விண்ணப்பங்கள் மீதான பகுப்பாய்வு தற்போது இடம்பெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய புதிய உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான முதற்கட்ட நடவடிக்கை இந்த வாரம் நடைபெறவுள்ளது.

இதுவரை கிடைத்துள்ள ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களின் முதற்கட்ட தகுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய ஆணைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எவ்வாறாயினும், அரசியலமைப்புப் பேரவை கூட்டத்தின் பின்னரே இந்த விடயம் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. (நி)

# அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை கண்டித்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டண அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள வரிச்சுமை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டித்தும் நுவரெலியா கந்தப்பளை நகர மத்தியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தை கந்தப்பளை பிரதேச பொதுமக்களுடன் இணைந்து சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள், எதிர்ப்புகளை பதாகைகளை ஏந்தியவாறு வெளிப்படுத்தி, கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மகளிருக்கான இருபது-20 உலகக்கிண்ணம் மகுடம் சூடியது அவுஸ்திரேலியா அணி

மகளிருக்கான இருபது-20 உலகக்கிண்ணத் தொடரில், ஆறாவது முறையாக அவுஸ்திரேலிய அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

கேப் டவுணில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நடப்பு சம்பியனான அவுஸ்திரேலிய அணியும் தென்னாபிரிக்கா அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 156 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.


இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மூனி ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களையும் கார்ட்னர் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், இஸ்மயில் மற்றும் காப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ம்லாபா மற்றும் ட்ரையோன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 157 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 137 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், அவுஸ்திரேலியா அணி, 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, லாரா வோல்வார்ட் 61 ஓட்டங்களையும் ட்ரையோன் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அவுஸ்திரேலியா அணியின் பந்துவீச்சில், மேகன் ஷட், கார்ட்னர், பிரவுண் மற்றும் ஜொனாசென் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்ட நாயகியாக, பெத் மூனி தெரிவு செய்யப்பட்டதோடு, தொடரின் நாயகியாக ஆஷ்லே கார்ட்னர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (6)




இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத் தினால் தம்புள்ளையில் இடம்பெற்ற 14 வயதின் கீழ் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.




யாழ்.லீக்கின் அனுசரணையுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாண ரீதியில் நடத்திய வடக்கின் சமர் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் வடக்கின் இரு துருவங்களான நாவாந்துறை சென்மேரிஸ் அணியினை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 3-1 என்ற கோல்கணக்கில் சென்மேரிஸ் அணியை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்து குருநகர் பாடுமீன்அணி வெற்றி வாகை சூடியது. (படம்- ஏனெஸ்ற்)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2773

### றியாஷ்



ஒரு மனிதனிடம்
உள்ள கல்வியும்
அறிவும்
பகுத்தறிவும்
சுயமரியாதையும் நல்ல
சிந்தனைகளும் தான்
தாழ்ந்து கிடக்கும் மக்களை
உயர்த்தும் ஆயுதங்கள்.
-பெரியார்-

### நித்தீஸ்




### ஜோஸ்வா

ஸ்கூல் படிக்கும் போது மக்ஸ் புக்ல இருந்த புரோப்பிளம்ம விட இப்போ லைப்ல அதிக புரோப்பிளம் ஆ இருக்குடா...



### உமையாளி

தட்டில சாப்பாட்ட போடுங்கம்மான்னு சொன்னதுக்கு....
என்னத் தூக்கி தட்டில போட்டுட்டாங்க...




### குறிஞ்சிநிலா




### தாருஷா

நேற்று எங்க கூட சாப்பிட்டிட்டு இருந்தவன்..
இப்போ..



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா மனித உரிமை பேரவையின் அமர்வில் ரஷ்யாவின் யுத்த குற்றங்களுக்கு முன்னுரிமை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வு நேற்று ஆரம்பமாகிய நிலையில் மனித உரிமை பேரவை உக்ரைனில் இடம்பெறும் யுத்த குற்றங்கள் தொடர்பான தனது விசாரணையை மேலும் நீடிக்கவுள்ளது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் யுத்தமே முக்கிய விடயமாகக் காணப்படும்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை வெளிப்படுத்தியது போல உலகம் உக்ரைனின் பக்கம் நிற்கின்றது என மனித உரிமை பேரவை அமர்வில் வெளிப்படுத்துவோம் என பிரிட்டன் தூதுவர் சைமன் மான்லி தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை காரணமாக இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள் குறித்த விசாரணைகளை நீடிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உக்ரைன் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழு ஏற்கனவே உக்ரைனில் ரஷ்யா பாரியளவில் மனித உரிமைகளை மீறுகின்றது என்பதை கண்டுபிடித்துள்ளது. (நி)



# புலம்பெயர்ந்தோர் சென்ற படகு கவிழ்ந்து 59 பேர் உயிரிழப்பு

## தெற்கு இத்தாலியில் துயரம்



(வத்திக்கான்)

தெற்கு இத்தாலிக்கு அப்பால் உள்ள மிக மோசமான கடலில் படகு மூழ்கியதில் 12 குழந்தைகள் உட்பட குறைந்தது 59 புலம்பெயர்ந்தோர் உயிரிழந்துள்ளனர். மற்றும் பலர் காணாமல் போயுள்ளனர்.

கலாப்ரியா பகுதியில் உள்ள கடற்கரை நகரமான குரோடோன் அருகே படகை தரிக்க முற்பட்டபோது கப்பல் உடைந்ததாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

படகில், குறைந்தது 150பேர் இருந்ததாக உயிர் பிழைத்தவர்கள் தெரிவித்தனர்.

இறந்தவர்களில், சில மாதங்களே ஆன குழந்தை ஒன்றும் இருப்பதாக இத்தாலியின் அன்சா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடற்கரையில் இருந்து அருகிலுள்ள கடலோர ரிசார்ட்டில் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. கடலோர காவல்படையினர் 80 பேர் உயிருடன் காணப்பட்டதாக தெரிவித்தனர்.

பல நாட்களுக்கு முன்பு துருக்கியில் இருந்து புறப்பட்ட படகில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சோமாலியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள் இருந்தனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஆபிரிக்காவிலிருந்து இத்தாலியில் ஏராளமான மக்கள். மோதல் அல்லது வறுமை காரணமாக தஞ்சமடைகின்றனர். (நி)

## உக்ரைனில் அமைதி ஏற்படுத்தும் பேச்சுக்கு உதவ இந்தியா தயார்-பிரதமர் மோடி அறிவிப்பு

(டில்லி)



உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைக்கு இந்தியா உதவி செய்ய தயாராக இருப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா வந்துள்ள ஜேர்மனி பிரதமருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். உக்ரைன் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மற்றும் ராஜ ஜீய ரீதியில் தீர்வு காண வேண் டும் என ஆரம்பம் முதலே இந் தியா வலியுறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த சந்திப்பின்போது இந்தியா மற்றும் ஜேர்மனிக்கு இடையில் காற்றாலை, சூரிய ஒளி திட்டம் என பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சீனாவில் நிலநடுக்கம்

(பியாங்யாங்)

வடமேற்கு சீனாவின் சின் ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பகுதியான அக்ஷுவுண்டியில் உள்ள வென்சுவுண்டியில் நேற்று காலை 7.58 மணியளவில் 5.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக சீன நிலநடுக்க வலையமைப்பு மையம் தெரிவித்துள்ளது. 41.87 டிகிரி வடக்கு அட்ச ரேகை மற்றும் 79.58 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையில் 10 கி.மீ ஆழமான நடுக்கம் காணப்பட்டதாக குறித்த மையம் தெரிவித்துள்ளது. (நி)

# இராசிபலன்

28.02.2023
மாசி 16, செவ்வாய்க்கிழமை
அட்டமி காலை 6.44 மணிவரை

ரோகினி முற்பகல் 11.16 மணிவரை
சுபநேரம் -10.58-12.28 மணிவரை
இராகுகாலம்- 3.28-4.58 மணிவரை

சந்திராஷ்டமம் - சுவாதி, விசாகம்

வளவன்

**மேஷம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கடகம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் பெருகி வளம் காணும் நாள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அரசு வழியில் அனுகூலம் உண்டு.

**துலாம்** பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம்.

**மகரம்** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளால் பெருமை வந்து சேரலாம்.

**ரிஷபம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**சிம்மம்** உற்சாகத்துடன் பணிபுரிந்து பலரது பாராட்டுக்களையும் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

**விருச்சிகம்** உறவினர்கள் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், தொழிலில் போட்டிகள் மாறும், தந்தை வழியில் தனவரவுகள் ஏற்படலாம்.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படலாம், அடுத்தவர் மீது அக்கறை கூடும்.

**மீனம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

எதிர்காலத்தை பயத்தோடு கண்களால் பார்ப்பது ஒருபோதும் நல்லதல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவக் கழிவுகள் எரியூட்டல் தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை மருத்துவக் கழிவு விடயம் தொடர்பில் பொதுமக்கள் அச்சமடைய தேவையில்லை என யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று மருத்துவமனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகள் பாதுகாப்பான முறையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் உள்ள எரியூட்டியில் எரிக்கப்பட்டு வந்தது.

அதிகளவில் மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்பட்டிருந்த நிலையில் எரியூட்டி இயந்திரத்தில் ஏற்பட்ட திருத்த வேலை காரணமாக தொடர்ந்து தெல்லிப்பழையில் எரிப்பதில் இடர்பாடான நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் நாம் மருத்துவமனைக்கு என தனியான ஒரு எரியூட்டி இயந்திரத்தினை பெற்று பொருத்தி அதனை பாவிப்பதற்கான முயற்சிகள் தொடர்பில் யாழ்.மாநகரசபையுடன் கலந்துரையாடி கோம்பையன்மணல் பகுதியில் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அமைத்து அதனை செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம்.

ஒரு வாரத்திற்கு முன்னர் ஆளுநரின் செயலாளரிடம் இருந்து எனக்கு கிடைக்கப் பெற்ற கடிதத்தில் கோம்பையன் மணல் பகுதியானது எரியூட்டி அமைப்பதற்கு பொருத்தமான இடம் இல்லை எனவும் மாற்று இடம் ஒன்றினை தெரிவு செய்யுமாறு கோரப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண ஆளுநருடன் இந்த விடயம்தொடர்பில் கலந்துரையாட உள்ளோம். அதேபோல் அந்த நிலைமை கைகூடும் வரை மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகள் தனியார் நிறுவனங்கள் மூலம் எரிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் இந்த மருத்துவக் கழிவுகள் தொடர்பில் அச்சமடைய தேவையில்லை. எனினும் விரைவில் மருத்துவமனைக்கென தனியான எரியூட்டி ஒன்று அமைப்பதற்குரிய முயற்சி முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6-33)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வே.குணசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

# கசிப்புடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒன்றரை லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைதான நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(நி-6-30)

# இலங்கை மீனவர்களை பாதிக்கும் தீர்மானங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படாது

## அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

இந்தியக் கடற்றொழிலாளர்கள் வடக்கு கடற்பரப்பில் மீன்பிடி தொழிலை மேற்கொள்வதற்கான அனுமதிகளை வழங்குவது தொடர்பாக தீர்மானங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்றொழிலாளர்களை பாதிக்கும் வகையிலான எவ்வாறான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது என அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த காலங்களில் சீனாவினால் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்படுவதாக கிளப்பிவிடப்பட்ட புரளிகள் தோற்றுப் போன நிலையில், இந்திய கடற்றொழிலாளர்களுக்கு அரசாங்கம் அனுமதி அளிக்கப் போகின்றது என்ற கதைகளை கூற ஆரம்பித்துள்ளது.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் முறையை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் எந்தவிதமான சமரசத்திற்கும் இடமில்லை என என அவர் தெரிவித்தார். (நி-6-33)



வடமாகாணத்தில் களப்பணியில் ஈடுபடும் ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பதினைந்து ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

(படம்: சிவசாந்தன், கஜிந்தன், சதீஷ்)

# யாழ்.போதனா மருத்துவமனைக்குள் நுழைந்த வன்முறைக் கும்பல்

## காவலாளி மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல் மருத்துவமனையின் காவலாளிமீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளதுடன், பொருட்களை வாளால் வெட்டி சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பட்டா ரக வாகனத்தில் வந்த கும்பல் ஒன்று யாழ்.போதனா மருத்துவமனையின் பிரேத அறை பக்கம் உள்ள நுழைவாயில் கதவால் ஏறி குதித்து மருத்துவமனைக்குள் நுழைய முயற்சித்துள்ளது.

இதனை அவதானித்த காவலாளி அவர்களை தடுக்க முயன்ற போது காவலாளி மீது தாக்குதல் நடத்த முற்பட்டதுடன் வாளால் காவலாளியை வெட்ட முயற்சித்துள்ளனர்.

சுதாகரித்துக் கொண்ட காவலாளி அவர்களை தடுக்க முயன்ற நிலையில், அங்கிருந்த கதிரை, மேசை போன்றவற்றை வாளால் வெட்டி சேதப்படுத்திய வன்முறை கும்பல் பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக, யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதனை அடுத்து, பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 320 | 300 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 160 | 130 | 160 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 280 | 350 |
| தக்காளி | 150 | 120 | 100 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 240 |
| கோவா | 100 | 70 | 80 | 100 |
| கரட் | 120 | 180 | 200 | 240 |
| பூசணி | 80 | 70 | 60 | 80 |
| புடோல் | 200 | 220 | 180 | 200 |
| வாழைக்காய் | 180 | 160 | 100 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 130 | 150 |
| பாகற்காய் | 450 | 450 | 400 | 600 |
| வெண்டக்காய் | 350 | 350 | 200 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 400 | 350 | 350 | 350 |
| லீக்ஸ் | 320 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 180 | 250 |
| கறிமிளகாய் | 650 | 450 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1500 | 1500 |
| போஞ்சி | 260 | 300 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 320 | 330 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 150 | 160 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 200 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 160 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 110 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 120 | 100 |

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது விஷமிகள் தாக்குதல்-பொலிஸார் விசாரணை



(அராலி).

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனிப்புலம் ஐயப்பன் கோவிலிலுக்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது இனந்தெரியாத கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் கொண்ட குழுவே இந்த தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது. குறித்த தாக்குதலில் கார் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு 400 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்குகின்றது உலக வங்கியின் ஐ.எஃப்.சி

(கொழும்பு)

இலங்கைக்கு அத்தியா வசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்காக நாணய பரிமாற்ற வசதியின் கீழ் 400 மில்லியன் டொலர் வழங்குவதாக உலக வங் கியின் முதலீட்டுப் பிரிவான இன்டர்நஷனல் ஃபைனா ன்ஸ் கோர்ப்பரேஷன் அறி வித்துள்ளது.

கடுமையான டொலர் தட்டுப்பாட்டினால் மிக மோச மான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங் கைக்கு இந்த நிதி மிகவும் தேவையான அந்நியச் செலா வணி என தெரிவிக்கப்படு கின்றது.

இதேவேளை நீண்ட கால நிதியுதவி மற்றும் ஆலோசனை சேவை களை வழங்குவதற்கான மேலதிக திட்டங்கள் குறித் தும் உலக வங்கியின் முத லீட்டுப் பிரிவான இன்டர்ந ஷனல் ஃபைனான்ஸ் கோர் ப்பரேஷன் தெரிவித்துள்ளது.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடன் 2.9 பில்லியன் டொலர் கடனு தவியை பெற்றுக் கொள் வதற்கான ஊழியர் மட்ட ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ள அதேவேளை எதிர்வரும் மார்ச் மாதமளவில் உதவி கிடைக்கும் என்றும் இல ங்கை நம்பிக்கை கொண்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இந்தியக் கடற்படைக் கப்பல் 'சுகன்யா' இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம்



(கொழும்பு)

இந்தியக் கடற்படைக் கப்பல் 'சுகன்யா' உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று கொழும்பு துறை முகத்தை வந்தடை ந்தது.

தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு, 'சுகன்யா' நாளை புறப்படும். (நி)

# கியூ.ஆர் முறைமையை நீக்க தீர்மானிக்கவில்லை

## அமைச்சர் காஞ்சன டுவிட்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் நடைமுறையில் உள்ள தேசிய எரிபொருள் அனு மதிப்பத்திர முறைமையை நீக்குவது தொடர்பில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன த்தை மேற்கோள்காட்டி தகவல் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் எந்த முடி வும் எடுக்கப்பட வில்லை என எரிசக்தி அமைச்சர் காஞ் சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதனைத் தனது உத்தி யோகபூர்வ டுவிட்டர் பக்கத்தின் ஊடாக அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், தற்போதுள்ள எரி பொருள் ஒதுக்கீட்டின் அளவை படிப்படியாக அதிக ரிக்க தேசிய எரிபொருள் அனுமதிப்பத் திர தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படு கிறது.

அடுத்த சில மாதங்களில் நிதி அமைச்சு மற்றும் பிற பங்கு தாரர்களுடன் கலந்தாலோசித்து இதற்கான முடிவினை எடுப் போம் எனத் தெரிவித்து ள்ளார். (நி)

# இலங்கை மக்களுக்கு உதவுங்கள்

## உலகத் தலைவர்களிடம் மைத்திரி கோரிக்கை

(சியோல்)

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு ள்ள இலங்கை மக்களுக்கு உலகத் தலைவர்கள் ஆதர வையும் உதவிகளையும் வழ ங்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன கோரியுள்ளார்.



தென்கொரியாவில் நடை பெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய த்தின் சிரேஷ்ட அரசியல் தலை வர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளார்.

இந்த இக்கட்டான காலங் களில் கடும் நெருக்கடிக்கு முகங்கொடுத்தவர்கள் மற்றும் ஏழை மக்களுக்காக உதவி களை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாடு வெற்றிகரமாக முன்னோக்கிச் செல்வதற்கு, நேர்மையான ஆளும்கட்சியும் குறுகிய அரசியல் இலக்கு களுக்கு அப்பால் சிந்திக்கும் முற்போக்கான எதிர்க்கட்சியும் அவசியம் என்றும் தெரிவித்து ள்ளார். (நி)

# இந்திய மீனவர்களை தாக்கிய இலங்கை கடற்படையினரை கைது செய்ய வேண்டும்

## அன்புமணி ராமதாஸ் வலியுறுத்து

(சென்னை)


தமிழக மீனவர்களைத் தாக்கிய இலங்கைக் கடற்படையினரைக் கைது செய்ய வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் தலை வர் அன்புமணி ராமதாஸ் வலி யுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று அன்பு மணி ராமதாஸ் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்,

வங்கக்கடலில் கோடியக்கரை அருகே மீன் பிடித்துக் கொண்டி ருந்த தமிழகம் மற்றும் புதுச்சேரி மீனவர்கள் மீது இலங்கை கடற்ப டையினர் தாக்குதல் நடத்தியுள்ளது டன், மீன் உள்ளிட்ட உடைமை களைக் கொள்ளையடித்துச் சென்று ள்ளனர். இது கண்டிக்கத்தக்கது.

கடந்த 24 ஆம் திகதி வங்க க்கடலில் மீன்பிடித்த தரங்கம்பாடி மீனவர்கள் மீது இலங்கைக் கடற் படையினர் தாக்குதல் நடத்தி னார்கள். அதனால் ஏற்பட்ட அச்ச மும் பதற்றமும் விலகுவதற்கு முன்பாகவே அடுத்த தாக்குதல் நடந்துள்ளது. இதில் 11 பேர் காய மடைந்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட இரு நிகழ்வுகளும் இந்தியக் கடல் எல்லைக்குள் நடந்துள்ளன.



மீனவர்கள் எல்லை தாண்டினால் கூட அவர்களைத் தாக்கும் அதி காரம் இலங்கை கடற்படைக்கு இல்லை.

அத்தகைய சூழலில் இந்திய எல்லைக்குள் நுழைந்து தாக்கி யதை இந்தியா வேடிக்கை பார்க்கக் கூடாது.

பொலிஸார் வழக்குப் பதிவு செய்து இலங்கைக் கடற்படையின ரைக் கைது செய்ய வேண்டும். இது தொடர்பாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதரை மத்திய அரசு நேரில் அழைத்துக் கண்டிக்க வேண்டும் எனத் தெரிவித்துள் ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: சூரி 7 செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/ தொழில்:தனியார் வங்கி<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/13357 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 2<br>கி.பா: சூரி 4 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/ தொழில்:Diploma Course மேக்அப்<br>எதிர்பார்ப்பு:நிரந்தரத் தொழில் வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ:G/13401 |
| பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா:சூரி 12 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: உயர்தரம் (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13358 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 13 ½ சூரி, செவ் 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc/ Software Engineer (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர்.IT Software Engineer BSc பட்டதாரி<br>தொ.இ:G/13403 |
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா:5 ½ சூரி 9 செவ் 11 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L பொலிஸ் உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் / வெளிநாடு<br>தொ.இ: B/13361 | பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 4<br>கி.பா:63 சூரி 6 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: ACCA(லண்டன்)<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி (லண்டன் மட்டும்)<br>தொ.இ: G/13408 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 28 ¾ சூரி 10 செவ் 6 இல்<br>தகைமை/ தொழில்: உயர்தரம் முகாமை யாளர் (தனியார் கம்பனி)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13362 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 4<br>கி.பா:சூரி 4 செவ் 5 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: படித்தவர் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/13412 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 114





ஒருசிலர் அவர்கள் கிட்டே வந்து சற்றே நின்று அரண்மனை முகப்பை எட்டிப் பார்த்துவிட்டும், புலிக் கொடியை அண்ணாந்து பார்த்துவிட்டும் போனார்கள். அதிக நேரம் நின்று கூட்டம் சேரும் போலிருந்தால் காவலர்கள் கையினால் சமிக்ஞை செய்து அவர்களைப் போகும்படி செய்தார்கள். கூட்டங்கூடி நின்றவர்களும் இரைந்து பேசாமல் காதோடு மெள்ளப் பேசிக் கொண்டார்கள்.

வந்தியத்தேவன் மற்றவர்களைப் போல் சிறிதும் தயங்கி நிற்கவில்லை. வேகமாகவும் மிடுக்காகவும் நடந்து சென்று அரண்மனைப் பாதைக் காவலர்களை நெருங்கினான்.

உடனே இரு குதிரைகளும் முகத்தோடு முகம் உராயும்படி வழி மறித்து நின்றன. குதிரை மேலிருந்தவர்கள், கீழே நின்றவர்கள், அனைவருடைய வேல்களும் முனையோடு முனை பொருந்தி வழியை அடைத்தன.

வந்தியத்தேவன் தன்னுடைய மந்திர மோதிரத்தை நீட்டினான். அவ்வளவு தான்; அதைப் பார்த்தவுடனே அவ்வீரர்களின் மிடுக்கும் பெருமிதமும் அடங்கின. ஒருவர் பின் ஒருவராக மூன்று பேர் மோதிரத்தை உற்றுப் பார்த்தார்கள்.

"சரி; வழி விடுங்கள்!" என்று ஒருவன் சொன்னான். இரண்டு வேல்கள் உடனே அகன்று நின்று வழிவிட்டன; வந்தியத்தேவன் மிடுக்குடன் நடந்து சென்றான்.

ஆயினும், என்ன? இன்னும் எத்தனை காவல்கள் இப்படி உண்டோ? சின்னப் பழுவேட்டரையர் எங்கே இருக்கிறாரோ? எப்படி விசாரிப்பது? யாரிடம் கேட்பது? சின்னப் பழுவேட்டரையரின் அனுமதியின்றிச் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாது; இந்தப் பெரிய விஸ்தாரமான அரண்மனையில் நோயாளியான சக்கரவர்த்தி எந்த இடத்தில் இருக்கிறாரோ? அதைத் தான் எவ்விதம் தெரிந்து கொள்வது?

தனக்குப் பின்னால் சிலர் கூட்டமாக வருவதை அறிந்து வந்தியத்தேவன் திரும்பிப் பார்த்தான். ஆம் பத்துப் பதினைந்து பேர் கும்பலாக வந்து, காவலர்களருகில் நின்றார்கள். அவர்கள் உயர்ந்த பட்டுப் பீதாம்பரங்கள் தரித்திருந்தார்கள்.

முத்து மாலைகள், மகர கண்டிகள், காதில் குண்டலங்கள் அணிந்திருந்தார்கள். சிலர் நெற்றியில் திருநீறும் மற்றவர்கள் சந்தனம், குங்குமம், சவ்வாதுப் பொட்டும் இட்டிருந்தார்கள்! ஆ! இவர்களைப் பார்த்தால் புலவர்களைப் போல அல்லவா இருக்கிறது!.. ஆம், புலவர்க்ளின் கூட்டந்தான் என்று மறுகணமே தெரிந்து விட்டது.

காவலர்களில் ஒருவன் அவர்களுடைய தலைவனாயிருக்க வேண்டும், "கவிராயர்கள் வந்திருக்கிறார்கள்! வழி விடுங்கள்!" என்று சொன்னதுடன் ஒரு வீரனைப் பார்த்து, "சின்னப் பழுவேட்டரையர் ஆஸ்தான மண்டபத்தில் இருக்கிறார் அவரிடம் கொண்டு போய் விடு!" என்றான்.

"புலவர்களே! ஏதாவது பரிசு கிடைத்தால் போகும்போது இந்த வழியாகவே திரும்பிச் செல்லுங்கள்! பரிசு கிடைக்காவிட்டால் வேறு வழியாகப் போய்விடுங்கள்!" என்று மேலும் அவன் சொன்னதைக் கேட்டு மற்றவர்கள் சிரித்தார்கள்! சற்று நின்று இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவன், "பழம் நழுவிப் பாலில் விழுந்தது!" என்று எண்ணிக் கொண்டான்.

இந்தப் புலவர்களுடனே போனால் சின்னப் பழுவேட்டரையர் இருக்குமிடம் போய்ச் சேரலாம். யாரையும் வழி விசாரிக்க வேண்டியதில்லை.

பிறகு, நமது சாமர்த்தியம் இருக்கிறது அதிர்ஷ்டமும் இருக்கிறது! இவ்வாறு எண்ணியபடியே புலவர் கூட்டத்துடன் சென்றான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திறமையான குள்ளன்



(நேற்றைய தொடர்ச்சி)

பெரிய அண்டாவில் கறிக் குழம்பு வைக்கிறேன். குழம்பு கொதி வந்ததும் நீ அந்த ஏழு பேரையும் தூக்கி வந்து அதில் போடு. அவர்கள் நன்றாக வெந்ததும் நாம் வயிறார உண்போம். மீதி உள்ளதைப் பொழுது விடிந்ததும் பேரன்கள் சாப்பிடட்டும்" என்றாள்.

"அம்மா! எனக்குப் பசி உயிர் போகிறது. சீக்கிரம் அண்டாவை அடுப்பில் வை. அந்த அறையில் என் மகன்களும் படுத்திருக்கிறார்களே? இருட்டில் எப்படி அந்தச் சிறுவர்களை மட்டும் தூக்கி வருவது? விழித்துக் கொண்டால் தப்பி விடுவார்களே?" என்று கேட்டான் அரக்கன்.

"நீ எளிதாக அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும் அதற்காகத் தான் என் பேரன்களின் தலையில் மட்டும் கிரீடம் அணிந்து உள்ளேன்" என்றாள் அவள்.

குள்ளனுக்குத் திடீரென்று விழிப்பு வந்தது.

கிழவியின் ஏழு பேரன்களும் தலையில் கிரீடத்துடன் படுத்திருப்பது அவனுக்குத் தெரிந்தது. "ஏன் இவர்கள் கிரீடத்துடன் தூங்க வேண்டும். ஏதோ சூழ்ச்சி நடக்கிறது" என்பதைப் புரிந்து கொண்டான் அவன். அவர்கள் தலையிலிருந்த கிரீடத்தை எடுத்தான். தன் அண்ணன்களின் தலையில் அவற்றை அணிவித்தான். தன் தலையிலும் கிரீடத்தை அணிந்து கொண்டான். என்ன நடக்கிறது என்பதை விழித்திருந்து பார்த்தான்.

சிறிது நேரத்தில் அரக்கன் உள்ளே நுழைந்தான். கிரீடம் அணிந்திராத சிறுவர்களை ஒவ்வொருவராகத் தூக்கிச் சென்றான். கொதிக்கும் குழம்பில் அவர்களைப் போட்டான்.

நடந்ததைப் பார்த்த குள்ளன் திகைத்தான். தன் அண்ணன்களை மெதுவாக எழுப்பிய அவன், "அரக்கனின் வீட்டில் சிக்கிக் கொண்டோம். உடனே தப்பிச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நம்மைக் கொன்று விடுவார்கள்" என்றான்.

இதைக் கேட்டு எல்லோரும் பயந்தனர். அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். சமைத்த கறியை அரக்கனும் கிழவியும் சுவைத்துச் சாப்பிட்டார்கள். பிறகு இருவரும் குறட்டை விட்டுத் தூங்கத் தொடங்கினார்கள்.

பொழுது விடிந்தது. அரக்கனை எழுப்பினாள் கிழவி. "என் பேரன்களை அழைத்து வா. அவர்களும் மகிழ்ச்சியாகச் சாப்பிடட்டும்" என்றாள்.

அறைக்குள் நுழைந்த அவன், " அம்மா! இங்கு யாருமே இல்லையே" என்று அலறினான்.

அங்கு வந்த அவளுக்கு உண்மை புரிந்தது. "ஐயோ அந்தச் சிறுவர்கள் நம்மை ஏமாற்றி விட்டார்கள். நம் குழந்தைகளைக் கொன்று நாமே தின்று இருக்கிறோம்" என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள்."

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லசெயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.
~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தென்னைக்கு வந்த பேராபத்து தடுத்து நிறுத்த களமிறங்குவோம்!

பசுவைத் தாயாக வணங்கிய நம் தமிழினம் தென்னையைத் தம் பிள்ளையாக அன்பும் பாசமும் காட்டி வளர்த்தது.

தென்னை மரமும் தன்னை வளர்த்தவர்களைத் தம் பெற்றோராகக் கருதி, தன் தலையால் இளநீர், தேங்காயைத் தந்துதவிற்று.

தவிர, நம் மக்களின் உணவுத் தேவைக்கும் வாழ்வாதாரத்துக்கும் தென்னை நல்கும் உதவி அளப்பரியது.

இதனாலன்றோ தென்னம் பிள்ளை வளர்ந்து முதலாவது பாளை வரும்போது, அத்தென்னைக்கு தங்க நகை அணிந்து பொங்கல் செய்து மகிழ்கின்ற பண்பாடு நம் தமிழினத்தில் இன்னமும் உயிர்ப்போடு இருக்கின்றது.

எங்கள் தமிழர் வாழ்வியலின் ஆதி முதல் அந்தம் வரை எங்களோடு பயணிக்கின்ற தேங்காய்; மங்கலம் நிறைந்த வழிபாட்டுப் பொருள். தேங்காய் உடைத்து தாலி கட்டி இல்வாழ்வை ஆரம்பிப்பது முதல் இல்லறத்தின் அத்தனை அங்கங்களிலும் தேங்காய் பெற்ற பேறு எத்துணை உயர்வானதென்பதை யாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

இவ்வாறு பெருமை பெற்ற தேங்காயைத் தன் தலையாலே தருகின்ற தென்னம் பிள்ளைகளுக்கு பேராபத்து ஏற்பட்டுள்ளதென்ற தகவல் அதிர்ச்சியைத் தருவதாகும்.

ஆம், **தென்னை வெள்ளை ஈ** யின் தாக்கத்தினால் தென்னைகள் பட்டுப் போகின்ற பயங்கரம் ஏற்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இந்த நோயின் தாக்கம் இலங்கையில் இனங்காணப்பட்டாலும் 2023ஆம் ஆண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்நோய் இனங்காணப்பட்டுள்ளது.

இந்நோய் காரணமாக யாழ்ப்பாணத்தை அண்மித்த இடங்களில் தென்னை மரங்கள் பட்டுப் போயுள்ளன.

இந்த நிலைமை கட்டுப்படுத்தப்படாத விடத்து, அதன் தாக்கம் தென்னை மரங்களை மிக மோசமாகப் பாதிக்கும் என்பது தென்னை ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

பொதுவில் தென்னை மரங்கள் நூறு ஆண்டுகள் நிலைத்து நின்று பயன்தர வல்லவை.

தவிர, தென்னை மரங்கள் ஓரளவுக்கு வளர்ந்துவிட்டால், பின்னர் அவற்றின் ஆயுளுக்கு ஆபத்து வந்ததாக நாம் அறியவில்லை.

இந்நிலையில் **தென்னை வெள்ளை ஈ** யின் தாக்கத்தால், தென்னை மரங்கள் பட்டுப்போகுமாயின், அதன் பாதிப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாக மிக நீண்டகாலங்களுக்கு நிலைத்து நிற்கும்.

உண்மை. எங்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருந்த முள்முருக்கம் மரத்துக்கு வந்த நோய் முள்முருக்கம் இனத்தையே முற்றாக அழித்துவிட்டது.

அந்த நோயில் இருந்து முள்முருக்கைப் பாதுகாக்கத் தவறிய நாம், அதே தவறை தென்னைகளின் விடயத்திலும் விடுவோமாயின், நம் நிலைமை அந்தோ என்றாகிவிடும்.

ஆகையால் தென்னைக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தை தடுத்து நிறுத்தி தென்னம் பிள்ளைகளைக் காப்பாற்ற அனைவரும் களமிறங்க வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

# வரி செலுத்தாவிடின் சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு அனுமதியில்லை

(யாழ்ப்பாணம்)

மார்ச் 3 ஆம் திகதிமுதல் 5 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள், யாழ். மாநகர சபையினால் கோரப்பட்டுள்ள விற்பனை மேம்படுத்தல் வரி முற்பணத்தைச் செலுத்தாவிடின் நிகழ்வுக்கான அனுமதியை வழங்குவதில்லை என்றும், மாநகர சபையினால் வழங்கப்படும் நலச் சேவைகளை வழங்குவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதிக்குழு, நேற்றுக்காலை மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் தலைமையில் கூடியது.

இதன்போது, சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஏற்பாட்டாளர்களால் வரிச்சலுகைக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்த நிதிக்குழு மேற்படி தீர்மானத்தை அறிவித்துள்ளது.

2019 ஆம்ஆண்டுமுதல் 2020,2022 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கான விற்பனை மேம்படுத்தல் வரி மற்றும் கேளிக்கை வரி நிலுவையாகச் சுமார் 40 லட்சம் ரூபாய் நீண்டகாலமாகச் செலுத்தப்படாமல் ஏற்பாட்டாளர்கள் காலத்தைக் கடத்தியுள்ளனர்.

இது தொடர்பில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நீண்ட விவாதத்தின் பின், 2019 முதல் 2022 வரையான காலப்பகுதிக்குரிய வரி நிலுவையை முழுமையாகச் செலுத்த வேண்டும் எனவும், 2023ஆம் ஆண்டுக்கான உத்தேச வரி மதிப்பீட்டின் 50 வீதத்தைச் செலுத்தினால் மட்டுமே நிகழ்வுக்கான அனுமதி வழங்கப்படும் எனவும் சபை தீர்மானித்து ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்திருந்தது.

இதனையடுத்து 2022 ஆம் ஆண்டு வரையான நிலுவையான ரூபாய் 44 லட்சத்தைச் செலுத்தியுள்ள ஏற்பாட்டாளர்கள், 2023 ஆம் ஆண்டுக்கான வரி முற்பணத்தைச் செலுத்தாமல், வரிக் கழிவு வழங்குமாறு கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர்.

எனினும், வர்த்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ள வர்த்தகர்களிடம் முழுமையான கட்டணம் அறவிட்டுள்ள ஏற்பாட்டாளர்கள் மாநகர சபைக்குரிய வரியைச் செலுத்தப் பின்னடிப்பது சந்தேகத்தை ஏற்படுத்துவதால், கடந்தகால கசப்பான அனுபவங்களின் அடிப்படையில் மாநகர சபையினால் கோரப்பட்டுள்ள விற்பனை மேம்படுத்தல் வரி முற்பணத்தைச் செலுத்தாவிடின் நிகழ்வுக்கான அனுமதியை வழங்குவதில்லை என்றும், மாநகர சபையினால் வழங்கப்படும் நலச் சேவைகளை வழங்குவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் உடனடியாக ஏற்பாட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. (ம-7,33)

# தேசிய கண்ணிவெடி மையத்தின் காலம்

## மேலும் 5 வருடங்கள் நீடிப்பு

(கொழும்பு)

தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்தின் காலம் மேலும் 05 வருடங்கள் நீடிக்கப்படவுள்ளது.

இதன்படி, வருடாந்த கையொப்பத்தின் அடிப்படையில் இந்த தேசிய மையத்தின் காலத்தை 2023 முதல் 2027 வரை நீடிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மோதல் சூழ்நிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதை வழிநடத்தவும் கண்காணிக்கவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையம் நாட்டில் நிறுவப்பட்டது.

இந்தப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணி 2002ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் தலைமையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் இருந்து பின்வாங்கியது. அதன் பின்னர் தேசிய கண்ணிவெடிநடவடிக்கை மையம் பணிகளை மேற்கொண்டு வருகிறது. வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக இராணுவ கண்ணிவெடி அகற்றும் பிரிவு மற்றும் 4 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து இந்த நிலையத்திற்காக செயற்பட்டு வருகின்றன.

இந்த அரசு சாரா நிறுவனங்களில் 3000க்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். சர்வதேச உதவி நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றும் செயன்முறைக்கு ஆதரவை வழங்குகின்றன. கடந்த வருடம் இதற்கென 14.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்ட நிலையில், இந்த ஆண்டு அது 17 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## வவுனியாவில் கிணற்றினுள்

# வீழ்ந்த 4 யானைகள் பாதுகாப்பாக மீட்பு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் சின்னசிப்பிகுளம் பகுதியில் விவசாய கிணற்றுக்குள் தவறிவீழ்ந்த 4 யானைகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு காட்டுப்பகுதிக்குள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள விவசாய கிணற்றினுள் நேற்றுக் காலை நான்கு யானைகள் தவறி வீழ்ந்ததமையை அவதானித்த கிராமவாசிகள் இது தொடர்பாக செட்டிகுளம் பிரதேச சபை மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வனஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் செட்டிகுளம் பிரதேச சபைக்கு சொந்தமான ஜேசிபி இயந்திரத்தின் உதவியுடன் நான்கு யானைகளையும் மீட்டுபாதுகாப்பாக காட்டிற்குள் அனுப்பி வைத்தனர். (ம-7,299)

## வட்டுக்கோட்டையில்

# பல திருட்டுக்களுடன் தொடர்புடையவர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பகுதியில் பல திருட்டுக்களுடன். தொடர்புடைய திருடன் ஒருவரை ஊர்காவற்துறை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருகையில்,

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபர் பல திருட்டுக்களுடன் சம்பந்தப்பட்ட நிலையில் ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அனலைதீவு பகுதியில் தலை மறைவாகி இருந்தார். அவருக்கு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கைது செய்யப்பட்டவேளை காஸ் சிலிண்டர், உலர் உணவுப் பொருட்கள், தராசு என்பன அவரிடமிருந்து மீட்கப்பட்டன.

குறித்த சந்தேகநபரை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் பட்டிமன்றம் நடத்துவதை விடுத்து
# அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள்

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

**(யாழ்ப்பாணம்)**

**அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நெருக்கடிகள் தோன்றுகின்ற பொழுது 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று கூறுவதும் இதனை சிங்கள இனவாத சக்திகள் எதிர்ப்பதும் பின்னர் அதனை திசைதிருப்பும் நோக்கில் செயற்படுவதும் இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்பவர்களின் வழக்கமாகி விட்டது என மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்திற்கும் சிங்கள இனவாத சக்திகளுக்கும் சமஷ்டி என்ற சொல் வேப் பங்காயாகக் கசக்கிறது. இப்பொழுது இருக்கக் கூடியது ஒற்றையாட்சி முறையைக் கொண்ட அரசியல் சாசனமே.

இந்த நாட்டில் சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டு வரவேண்டுமாக இருந் தால், சமஷ்டி முறைமையை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியல் சாசனம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான சமஷ்டி அரசியல் சாசனத்திற்குத் தமிழர் தரப்பில் யாரும் எதிரானவர்கள் அல்ல.

இந்த நிலையில்,ஒரு மாற்று ஏற்பாடு இல்லாமல், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் காரணமாக உருவாக்கப்பட்ட மாகாண சபை களை நிராகரிப்பதும் அதனை அரசியல் சாசனத்திலிருந்து தூக்கியெறிய வேண்டும் என்று சொல்வதும் தமிழ் மக்களுக்குக் கிடைத்தவற்றையும் இல் லாமல் செய்யக் கூடிய அறிவீலித்தனமான செயலாகும்.

பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது.

அதுமாத்திரமல்லாமல், சர்வதேச ரீதியிலும் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையத்தினூடாகவும் பதின் மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியா கோரிக்கை விடுத்து வருகின்றது.

பதின்மூன்றாவது திருத்தம் வேண்டுமா? வேண்டாமா? அதனை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? என்று பட்டிமன்றம் நடத்துவதை விடுத்து,தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளவும் நாட்டை முன்னோக்கி நகர்த்தவும் பதின்மூன்று முழுமையாக நடை முறைப்படுத்தப்பட்டாலே சாத்தியமாகும் என்பதைப் புரிந்து கொண்டு செயற்படுவது நாட்டின் அனைத்து அரசியல் சமூகத்திற்கும் நல்லது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# 41 கிலோ கேரளா கஞ்சா பொதியுடன் மன்னாரில் ஒருவர் கைது



(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பிரதான வீதியின் ஆடைத் தொழிற்சாலையின் பின் பகுதியில் உள்ள களப்பு பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை காலை ஒரு தொகுதி கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரிடம் இருந்து 41கிலோ 620 கிராம் கேரளக் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து குறித்த கைது முன்னெடுக் கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா என்பன மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளது.(நி-6-285)

# இந்தியாவை நம்பி பயனில்லை
## காணாமல்போன உறவுகளின் சங்கம்

(வவுனியா)

சிங்களவர்களிடம் இருந்து தமிழர்களுக்கு எதனையும் இந்தியா பெற்றுத் தரும் என்று நம்ப வேண்டாம் என வவுனியாவில் கடந்த 2200 நாட்களாக தொடர்போராட்டம் மேற்கொள்ளும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தினர் தெரிவித்தனர். வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்கள்,

தமிழர் இறையாண்மையை மீட்டெடுக்க அமெரிக்காவின் உதவியை தமிழர்களாகிய நாம் அனைவரும் கோர வேண்டும்.

சிங்களவர்களிடம் இருந்து இந்தியா தமிழர்களுக்கு எதனையும் பெற்றுத் தரும் என்று நம்ப வேண்டாம்.

ரஷ்யாவின் புடின் மற்றும் அவரது தளபதிகளால் உக்ரைன் மீதான கொடூரமான கொலைகளைக் கண்டிக்காமல் ஐ.நா வாக்கெடுப்பில் நடுநிலை வகித்ததால் இந்தியா தனது மனித உரிமை அந்தஸ்தை இழந்தது. எனவே நமது இறையாண்மையை மீட்டெடுக்க அமெரிக்காவின் உதவியை வேண்டி நிற்கின்றோம் என தெரிவித்தனர்.(நி-6-299)

# சந்தேகநபர்கள் தொடர்பில் விபரம் தெரிந்தால் அறியத் தரவும்
## பொலிஸார் கோரிக்கை

(கரணவாய்)

வீதியால் சென்ற பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்களினால் கொள்ளையிட்டு செல்லப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை முற்பகல் பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட திக்கம் மானாண்டி சந்தைக்கு அருகாமையில் வீதியால் சென்று கொண்டிருந்த வேளை குறித்த பெண்ணின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி கமராவின் உதவியுடன் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சி.சி.ரி வியின் பதிவுக் காணொலியில் இரு நபர்கள் தலைக்கவசம் அணிந்தவாறு மோட்டார் சைக்கிளில் குறித்த திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே குறித்த படத்தில் காணப்படும் சந்தேக நபர்கள் தொடர்பில் விபரங்கள் தெரிந்தவர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு அறியத்தருமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (நி-6-60)






கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு பொது நூலகத்தினால் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

(படம்- கிருஷ்ணகுமார்)

# இடம்பெயர்ந்து சென்ற மக்களின் காணிகளை அபகரிக்க முயற்சி



(நெளுக்குளம்)

வவுனியா கள்ளிக்குளம் சிதம்பரம் கிராமத்திற்குள் அனுமதியின்றி நுழைந்த பெக்கோ இயந்திரம் இந்தியாவில் தஞ்சமடைந்தவர்களின் ஐந்து ஏக்கர் காணிக்குள் அத்துமீறி நுழைந்து துப்புரவுப் பணிகளை முன்னெடுத்தனர். இக்காணியில் கிணறு மற்றும் மலசலகூடம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த காணி துப்புரவுப் பணிகளை நிறுத்தி விட்டு அங்கிருந்து சென்று விட்டனர். இது தொடர்பில் மாமடுப் பொலிஸார் கிராம அபிவிருத்திச்சங்க அமைப்புடன் தொடர்பு கொண்டு விடயங்களைக் கேட்டறிந்து கொண்டனர்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்றவர்களின் காணிகள் தற்போது இலக்கு வைக்கப்பட்டு அபகரிக்கப்பட்டு வருகின்றன.

எனவே இவ்வாறான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த அரச அதிகாரிகள் முன்வர வேண்டும். மேலும் இந்தியாவிற்குச் சென்றவர்களின் காணிகள் பாதுகாக்கப்பட்டு அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் என கிராம அபிவிருத்திச் சங்க அமைப்பினர் தெரிவித்தனர். (நி-6-299)

# வன்னேரிக்குளம் வீதியில் யானைகளின் நடமாட்டம் அதிகரிப்பு
## அச்சத்தில் பயணிகள்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் வன்னேரிக்குளம் வீதியில் யானைகளின் நடமாட்டத்தினால் பொதுமக்களின் போக்குவரத்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது.

மாலை 6 மணியளவில் 9 ஆம் கட்டைப் பகுதியில் வீதிக்கு அருகில் வரும் யானைகள் வீதியில் நீண்டநேரம் தரித்து நிற்பதனால் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் தொடர்ந்து பயணிக்க முடியாமல் வீதியில் காத்து நிற்க வேண்டிய நிலைமை உருவாகி உள்ளது.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் குறித்த வீதிப் பகுதியில் யானைகளின் நடமாட்டம் காணப்படுவதாகவும் அவ்வீதியில் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்களை பாதுகாப்பாக பயணிக்குமாறு பொது அமைப்புக்கள் அறிவித்துள்ளன. (நி-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளைக் காய்ச்...

ளார்.

யாழ்.புத்தூர் கிழக்கு - ஊறணி பகுதியைச் சேர்ந்த அஜிந்தன் லக்ஸ்மிதா (வயது-4) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

கடந்த சிவராத்திரி தினத்தன்று திடீரென வாந்தி எடுத்து சுகயீனமடைந்த நிலையில் அச்சிறுமி அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளின் பின்னர் சிறுமியின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,33)

## தோட்டக்...

மேற்படி நபர் பாதுகாப்பற்ற வயல் கிணற்றில் சடலமாக காணப்பட்டமை தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு நேற்று மாலை சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நெல்லியடி பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-7)

## மீண்டும் மின்...

தால் நிலைமையைக் கட்டுப்படுத்தியிருக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மின்வெட்டை நிறுத்தியதன் பலன் எதிர்காலத்தில் தெரியும் எனவும் மக்கள் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7)

## கரவெட்டியில்...

தில் ஏற்பட்ட தீ விபத்தினால் புடைவையகத்தின் பின்பகுதி பற்றி எரிந்தது.

இதனையடுத்து அப்பகுதியில் கூடிய இளைஞர்கள், பொதுமக்கள் அங்கிருந்த உடுபுடைவைகளை வெளியில் எடுத்து போட்டு பாதுகாத்தனர்.

அச்சமயம் யாழ். மாநகர சபையில் தீயணைப்பு வாகனம் மற்றும் இராணுவத்தினரின் நீர்த்தாங்கி என்பன வருகை தந்து தீயினை அணைத்தன. (ம-7,60)

## பொதுமக்கள்...

சிங்க, வாயை மூடி அமருமாறு எதிர்க்கட்சி உறுப்பினருக்கு தெரிவித்ததையும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஆயிரக்கணக்கானோர் நேற்று முன்தினம் நடத்திய போராட்டத்தில் பொலிஸார் பலமுறை கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்த போராட்டத்தில் காயமடைந்த 28 பேர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## அரசுக்கு எதிரான...

அரசுக்கு எதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் 28 பேர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஆர்ப்பாட்டக்...

உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, உயரமுத்த நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கை கோரியுள்ளதாக தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்குள் இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது.

கொம்பனித்தெரு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யூனியன் பிளேஸ் பகுதியில் இந்தப் பேரணி இடம்பெற்றபோது, அதனை தடுக்கும் வகையில் பொலிஸார் உயரமுத்த நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகை பிரயோகத்தை மேற்கொண்டிருந்தனர்.

எவ்வாறாயினும், குறித்த பகுதியில் எதிர்ப்புப் பேரணிகளை நடத்த தடைவிதித்து நீதிமன்ற உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன் குறித்த அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## அரசுக்கு எதிராக...

எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி இந்த தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அதற்கு முன்னதாக எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவும் தீர்மானித்துள்ளன.

வருமான வரித் திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தோல்வியடைந்ததை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் பொறியியல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்பட இலங்கையிலுள்ள பல நிபுணர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கில் இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## பொருளாதார...

எனினும் இவ்வாறான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கொழும்பு றோயல் கல்லூரி சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக பிரபலமற்ற கடுமையான தீர்மானங்களை எடுக்க நேரிட்டது. மேலதிக வரி செலுத்த வேண்டியேற்பட்டுள்ளமையால் எனது தீர்மானம் அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை நான் அறிவேன்.

எவ்வாறிருப்பினும் அந்த தீர்மானங்களை எடுக்க வேண்டியேற்பட்டுள்ளது. அதனை தட்டிக்கழிக்க முடியாது.

பொறுப்புகளிலிருந்து தப்பிச் செல்வதற்கு றோயல் கல்லூரி எனக்கு கற்றுக் கொடுக்கவில்லை. எனவே தான் நான் தீர்க்கமான முடிவினை எடுத்துள்ளேன். கிரேஸ் நாட்டுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கும் ஏற்பட நான் இடமளிக்கப் போவதில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ள கடனுதவியுடன் அடுத்த ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டுக்குள் சிறந்த பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்வதே எனது எதிர்பார்ப்பாகும் என்றார். (ம-7)

## நீராடச் சென்ற இளைஞன் பலி

(கொழும்பு)

நண்பர் ஒருவருடன் நானுஓயா டெஸ்போட் கால்வாயில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நானுஓயா டெஸ்போட் தோட்டத்தின் மேல் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞனே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1499
கன்னி 1 4 8 3 2 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1074
L 36 51 59 60

கொவிசெத
திகதி 2023.02.27
சீட்டிழுப்பு இலக்கம் 3286
Y 08 16 54 70
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1392
G 20 13 18 40 70

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.02.27
சீட்டிழுப்பு இலக்கம் 353
மீனம் 20 27 29 58 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/27
சீட்டிழுப்பு இலக்கம் 5044
Q 9 4 4 9 3 7
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2019
சீட்டிழுப்பு திகதி 2023.02.27 தினம் திங்கட்கிழமை
I 02 10 46 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,878,480/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.27
சீட்டிழுப்பு இல : 4180
வர்ணம் : இள நீலம்
ரூ. 4,768,460/-
02 12 26 40 B
DLB

ராசி
ரூ. 3,599,404/-
திகதி 2023-02-27
வெற்றி வாரம் 3731
வர்ணம் மஞ்சள்
23 25 52 60 கும்பம்
6891 412
ரூ. 13,999,364/-
DLB

X 30 11 20 47 67
சீட்டிழுப்பு வாரம் 1195
பச்சை
2023.02.27 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 309,374,748.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1900
சீட்டிழுப்பு திகதி 2023-02-27
15 38 41 53 I
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 40,413,457.60
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1845
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.02.27
ரூ. 4,646,840/-
25 45 51 60 E
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குடு' போதைப்பொருளுடன் வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

"குடு" போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் உட்பட இருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா மகாறம்பைக் குளம் பகுதியில் போதைப் பொருள் விற்பனை இடம்பெற்று வருவதாக வவுனியா பொலிஸ் நிலைய போதைத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலிற்கமைய குறித்த பகுதியில் உள்ள வீடொன்றினை சோதனையிட்ட பொலிஸார் அங்கு 10 கிராம் "குடு" போதைப்பொருளை மீட்டனர்.

குறித்த போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அதே பகுதியை சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவரும் 26 வயதுடைய ஆண் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14750)

076 825 7716 (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 80 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14754)

076 465 0171, 076 911 9371

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant ற்கு வேலைக்கு ஆட்கள் தேவை

தொடர்புகளுக்கு :

076 830 3931 (14744)

## பராமரிப்பாளர் (பகுதி நேரம்) தேவை

கோண்டாவில் கிழக்கு ஞானவைரவர் வீதியில் வசிக்கும் 85 வயதுடைய அம்மா ஒருவரைப்பராமரிப்பதற்கு பெண் பணியாளர் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசி முடிவு எடுக்கலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இலக்கம்.

077 686 7485 (C-6071)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 44 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 km தூரம்
- புத்தூர் சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி
- அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14754)

076 435 0614, 077 638 5683

## உயர் கலைக் கல்லூரி - ஆரியகுளம்

ஊடகக்கற்கை வகுப்புக்கள்

A/L 2023, 2024

மற்றும்

Day Class

தனிப்பட்ட, குழுவாக கற்பிக்கப்படும் யாழ் முன்னணி ஆசிரியர்.

தொடர்புக்கு :

077 644 6514 (C-6070)

## காணி விற்பனைக்கு

மானிப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில் காக்கைதீவு வீதியிலிருந்து 50M தொலைவில் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

யாழ் மாநகர சபை எல்லைக்குள் உட்பட்டது.

(14753)

தொடர்புகளுக்கு :

074 345 2453

076 374 8979

## தேவை

தனியார் கல்வி நிறுவனத்திற்கு அனுபவமும் திறமையும் வாய்ந்த எழுதுனர் (Cleark - பெண்) தேவை.

யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :-

077 459 8440 (14750)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6075)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6075)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 076 436 5814

076 485 4390 (14755)

## தென் இந்திய யாத்திரை

**ஆரம்பம் - 28.03.2023 நாட்கள் 16** தரிசிக்கும் கோயில்கள் விபரம் உச்சிப்பிள்ளையார், ஆறுபடை முருகன் கோயில்கள், ஒன்பது நவக்கிரக கோயில்கள், தனித்தனியாக, பஞ்ச பூதத்தலங்கள் ஐந்து, மதுரை மீனாட்சி அம்மன், தஞ்சைப்பெரிய கோயில், இராமேஸ்வரம், திருப்பதி, கேரளா குருவாயூர், மைசூர் சாமுண்டீஸ்வரி, கன்னியகுமாரி பகவதி அம்மன் உட்பட 60 ற்கும் மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம்.

**ஆரம்பம் - 10.05.2023 நாட்கள் 12** நேபாள் முத்திநாத், பசுபதிநாத் அயோத்தி, காசி வேறு சில ஆலயங்களையும் தரிசிக்கலாம்.

## வட இந்திய யாத்திரை

பத்திரிநாத், கேதாரநாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, ஹரித்துவார், ரிசிகேஷ் மேலும் சில ஆலயங்களை தரிசிக்கலாம்.

ஆரம்பம் :- 10.06.2023 நாட்கள் 12.

மேலதிகமான விபரங்களை கேட்டறிந்து கொள்ளவும்.

விபரங்களுக்கு :- ஸ்ரீரெங்கநாதன், ராஜன் (மகன்)

077 736 2154 / 077 768 0102 (14752)


## மரண அறிவித்தல்

## நடராசா தேவராணி



காரைநகர் சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும் மில்வீதி, இடைப்பிட்டியை வசிப்பிடமாகவும், தற்போது வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தேவராணி அவர்கள் நேற்றையதினம் (27.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாமலை - சுந்தையாபிள்ளை (சுந்தப்பு) பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை - சுந்தரம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும் நடராசா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், விஸ்வலிங்கம், செல்வரத்தினம் மற்றும் உமாதேவி, காலஞ்சென்ற துரைராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியும், பத்மநாதன் (அதிபர் - யா/அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலயம், கணித ஆசான் - ஐடியல் அக்கடமி), சோதிநாதன் (மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு தாயாரும், சசிகலா, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லக்ஷிகா, தர்ஷிகா, சாம்பவி, பவனிகா, யதுர்ஷன், மதுஷன், விஹாஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.50/18 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (C-6076)

தகவல் : குடும்பத்தினர்

077 392 6736 / 077 777 1384

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.